**மாத்தறை பல்கலைக்கழக கல்லூரிம் - 2023**

-------------------------------------------------------------------------------

## 1 நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மாத்தறை பல்கலைக்கழக கல்லூரியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய தகவல் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புக்கள், 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பல்கலைக்கழக கல்லூரியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில ் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில ் எனது அறிக்கை முனைப்பழியாக்கப்படுகினறது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல ் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது. நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கல்லூரி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழக கல்லூரியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல ்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது. பல்கலைக்கழக கல்லூரியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழக கல்லூரியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு கல்லூரி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றுk; பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். . நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந் நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும். இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள ் திட்டமிட்டுவதன் செயற்படுத்தப்படுகின்றன. தவறாக குறிப்பிடப்பட்டதன் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்லாமல் சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்யப்பட்டன.
- நிகழ்வுகள ் அல்லது நிலைமைகள ் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந ் து இயங்குவது தொடர்பாகபோதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன அவ்வெளிப்படுத்தல ்கள் 3 பொருண்மையாக இல்லாதிருந ் தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்

வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள ் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல். இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம ் பினிவருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிககள் கோவை, பதிவேடுகள ், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக ் கோவை, பதிவேடுகள ், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதாஎனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கிமன்மை**

| குறித்த கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டு செயற்படுத்தப்படாதிருந்த (LMS) கற்றல் முகாமைத்துவ முறைமைக்காக ரூபா 1,353,320 ஆன காசோலையொன்று 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வழங்கப்பட்டு இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 20 இன் 28 ஆம் பந்திக்கு முரணாக அவ்வாண்டில் கற்பனைச் சொத்தாக கணக்கீடு செய்தமை காரணமாக கற்பசைன் சொத்துக்கள் அப்பெறுமானத்தினால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது, அம்முறைமை 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் பயன்படுத்தாதிருக்கையில் நியமத்தின் 96 ஆம் பந்திக்கு முரணாக பெறுமானத்தேய்வ சீராக்கம் செய்தமையால் மீளாய்வாண்டின் செலவினம் ரூபா 96,590 ஆலும் திரண்ட பெறுமானத் தேய்வு ரூபா 97,649 ஆலும் கூடுதலாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 திசெம்பர் 27 ஆம் திகதி முதல் சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டது. LMS முறைமை முழுமையாக அபிவிருத்தி செயப்பட்டு முடிவடைந்ததன் பின்னர் 2023 திசெம்பர் 27 ஆந் திகதி காசோலை வழங்குனருக்கு வழங்கப்பட்டதாக | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 80 இன் 01 ஆம் பந்தியின் பிரகாரம் அறிக்கையிடல் காலப்பகுதியின் பின்னர் வரும் 12 மாத காலப்பகுதியில் விடுவிக்கப்பட்ட | அடுத்த ஆண்டு முதல் நடைமுறை அல்லாத பொறுப்பு நடைமுறைப் பொறுப்புகள் என | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க |

| | | |
|---|---|---|
| வேண்டிய கடப்பாடுகள் நடைமுறை பொறுப்புகளாக இனம் காணப்பட வேண்டும். மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுகளில் நடைமுறை பொறுப்பின் கீழ் காண்பிக்கப்பட்ட திருப்பிச் செலுத்த வேண்டிய நூலக வைப்புக்களின் பெறுமதியில் உள்ளடக்கப்பட்ட ரூபா 3,333,000 ஆன நடைமுறை அல்லா பொறுப்புக்கள் நடைமுறை பொறுப்பின் கீழ் காண்பிக்கப்பட்டமையால் நடைமுறை பொறுப்பு அப்பெறுமானத்தால் கூடுதலாகவும் நடைமுறை அல்லாத பொறுப்புகள் அப்பெறுமானத்தால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | இனங்கண்டு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதாக | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015 ஆம் ஆண்டு முதல் பல்கலைக்கழக கல்லூரி நடத்திச் செல்லப்படும் காணி மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கு வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கல்லூரி நிறுவப்பட்டுள்ள காணி மாத்தறை பிரதேச செயலகத்தினால் திறன் அபிவிருத்தி அமைச்சுக்கு கையளிக்கப்பட்டுள்ளது. அக்காணியின் உரித்து அமைச்சின் கீழ் காணப்படுவதால் பல்கலைக்கழக கல்லூரியை நடத்திச் செல்வது மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு எவ்வித தடையும் இல்லை என்பதாக அமைச்சின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக | மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 13,314,589 ஆன பற்றாக்குறையொன்றாக இருந்ததுடன் முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 27,189,925 ஆகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 13,875,336 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு மூலதன மானியம் அதிகரித்தமை, பெறுமதி பரிமாற்றல் கொடுக்கல் வாங்கல் வருமானம் அதிகரித்தமை மற்றும் வருடாந்த பெறுமானத்தேய்வு ஏற்பாடு குறைவடைந்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பாடநெறி மொடியுல்களுக்கு உரிய 21 சந்தர்ப்பங்களின் போது திட்டமிடப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட 1911 | மொடியுல்களுக்காக குறித்துரைக்கப்பட்ட மணித்தியாலங்கள் மேவுகை செய்ய முடியாமைக்கு சில | மொடியுல்களின் குறித்துரைக்கப்பட்ட மணித்தியாலங்கள் மேவுகை செய்ய |

| | | |
|---|---|---|
| விரிவுரை மணித்தியா லங்களில் 1500 மணித்தியாலங்கள் மேவுகை செய்யப் பட்டிருக்க வில்லை. அதன் பிரகாரம் திட்டமிடப்பட்ட விரிவுரை மணித்தியாலங்களில் போதிய அளவு மேவுகை செய்யாமை பலவீனமான மட்டத்தில் காணப்பட்ட காரணத்தால் மாணவர்களுக்கு தேவையான அறிவு போதியளவு பெற்றுக் கொள்ளப்பட்டதா என்பது கணக்காய்வின் போது திருப்தியடைய முடியாதிருந்தது. | வெளி வாரி விரிவுரையாளர்கள் வெளிநாடு சென்றமை, தனிப்பட்ட காரணங்களால் விலகியமை மற்றும் மணித்தியாலயத்திற்கான கொடுப்பனவு குறைந்தமை காரணங்களாக இருந்தன. | முடியாமைக்கு சில வெளிவாரி வரிவுரையாளர்கள் வெளிநாடு சென்றமை, தனிப்பட்ட காரணங்களால் விலகியமை மற்றம் மணித்தியாலயத்திற்கான கொடுப்பனவு குறைந்தமை காரணங்களாக இருந்தன. |
| (ஆ) 2015, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது லெபிலொ னொலஜி பாடநெறிக்காக சேர்க்கப்பட்ட 35 மாணவர்களில் 24 மாணவர்கள் மற்றும் 2019 முதல் 2021 ஆம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப் பட்ட ஒன்பது பாடநெறிக்காக சேர்க்கப்பட்ட 824 மாணவர் களில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் 95 பேர் பாடநெறிகளை விட்டுச் சென்றிருந்தனர் அம் மாணவர்கள் பாடநெறியை விட்டு செல்வதற்கான காரணங்களை ஆராய்ந்து பார்த்து தக்க வைப்பதற்கு தேவையான நடவடிக்கை களை முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் ஆரம்ப முதல் கோவிட் 19, பொருளாதார சிக்கல் போன்ற சிக்கல்கள் காணப்பட்டதுடன் மாணவர்கள் வெளிநாடு செல்லும் போக்கு அதிகரித்தமை காரணமாக மாணவர்கள் பாடநெறிகளை விட்டுச் செல்லும் போக்கு கொண்டு காணப்பட்டது. உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியாக NVQ தகைமை பெற்றுக் கொள்வது முக்கியம் மற்றும் அதற்கு உள்ள கேள்வி தொடர்பாக மாணவர்களிடம் அறிவினை ஊட்டுவதற்கு அனைத்து விரிவுரையாளர்களாலும் மேற்கொள்ளப்படுவதாக | ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட மாணவர்களின் தக்க வைத்துக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கையில் எடுத்தல் வேண்டும். |

## 3.2 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாட்டிலான சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாணவர்களின் செய்முறை பயிற்சி செயற்பாடுகளுக்காக 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 1,250,000 தொகை செலவு அசெய்து கொள்வனவு செவய்யப்பட்டிருந்த Vehicle Hoist and wheel Alignment உபகரணம் மீளாய்வாண்டின் | இந்த உபகரணத்தை நிறுவுவதற்காக அண்மித்த அளவில் 38 அடி நீளம் மற்றும் 20 உயரம், 15 அடி அகலம் அளவிலான இடத்துடன் கூடிய கட்டிடம் ஒன்று தேவையாகும். நிறுவனத்திற்கு மாற்றுக் காணி கிடைத்த பின்னர் குறித்த உபகரணங்களையும் உரிய | முறையான சாத்தியவள ஆய்வின மேற்கொண்டு கொள்வனவு செய்யப்பட வேண்டியதுடன் கொள்வனவு செய்யப்பட்ட |

| | | |
|---|---|---|
| திசெம்பர் 31 ஆந் திகதி வரைபயன்பாட்டிற்கு எடுக்காமல் விளைவற்று காணப்பட்டது. | தரத்தில் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | உபகரணத்தை குறித்த செயற்பாடுக்காக பயன்படுத்த வேண்டும். |

**4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக ஆண்டறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டிற்குரிய ஆண்டறிக்கை தயாரிக்கப்பட்டு வருவதாக | 1971 இன் 38 ஆம் இலக்க சட்டத்தின் 14 ஆம் பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். |